
ஓரியண்டல்
மூவீஸ்
பொன்னு விளையும்
பூமி
டைரக்ஷன்
A.பீம்சிங்
பூரண உரிமையாளர்
S.K.பிக்சர்ஸ்
திருநெல்வேலி, சென்னை-24.
BAKTHA

## நடிகர்கள்

| | | |
|---|---|---|
| ஜெமினி R. கணேசன் | ... | நல்லான் |
| T. S. பாலையா | ... | ரத்தினம் |
| J. P. சந்திரபாபு | ... | சமதாமம் |
| S. V. சுப்பையா | ... | நாகன் |
| D. பாலசுப்ரமணியம் | ... | பலகோடி முதலியார் |
| P. K. சத்தியபால் | ... | பகதூர் |
| ராமராவ் | ... | அய்யர் |
| நம்பிராஜன் | ... | சுருள் |
| M. N. கிருஷ்ணன் | ... | ஜப்பான் |
| G S மகாலிங்கம் | ... | வண்டிக்காரன் |
| ஜெமினி பாலு | ... | போலீஸ் இன்ஸ்பெக்டர் |
| V. K. ஆச்சாரி | ... | ரௌடி |
| மாஸ்ட்டர் ஸ்ரீதரன் | ... | இன்பன் |
| நெல்லை அழகியசுந்தரம் | ... | பாங்க் க்ளார்க் |

## நடிகைகள்

| | | |
|---|---|---|
| பத்மினி | ... | முத்தம்மா |
| ராகினி | ... | ரூபா |
| சுகுமாரி | ... | கலா |
| லெட்சுமிகாந்தம் | ... | சுந்தரி |
| B. சந்திரா | ... | தாயம்மா |
| அங்கமுத்து | ... | குண்டம்மா |

## மற்றும் பலர்

| | | |
|---|---|---|
| பூர்ண உரிமையாளர் | ... | S. K. பிக்சர்ஸ் திருநெல்வேலி<br>மதருஸ்-24. |
| கதை-வசனம் | ... | இராம அரங்கண்ணல் |
| பாடல்கள் | ... | கவிஞர் கண்ணதாசன்<br>(லேட்) கல்யாணசுந்தரம்<br>அ. மருதகாசி<br>K. S. கோபாலகிருஷ்ணன்<br>திருச்சி தியாகராஜன் |
| பின்னணி | ... | சிதம்பரம் C. S. ஜெயராமன்<br>T. M சௌந்திரராஜன்,<br>சீர்காழி கோவிந்தராஜன்<br>சுசீலா, ஜிக்கி, ஜமுனாராணி, ஜானகி |
| இசை அமைப்பு | ... | K. H ரெட்டி. |
| தயாரிப்பு | ... | P. K சத்தியபால். |
| திரைக்கதை & டைரக்ஷன் | ... | A. பீம்சிங் |

# "பொன்னு விளையும் பூமி"

♣

துங்கத் தரணியென்பர் நம்முடைய தாயகத்தை! இந்த மண் மாதாவின் மடியிலே உள்ள பல்லாயிரக்கணக்கான ஊர்களிலே ஒன்று வயலூர். மானமொன்றே பெரிதெனக்கொண்டு; அங்கு வாழ்ந்து வந்தான் நாகன். அவனுக்குப் பூமியே தாய்; பொறுமையே செல்வம்; வயலே கோயில்; உழைப்பே உயிர்.

இந்த மறக்குலத்தவன் மகன் நல்லான்; அக்கிரமம் காணப்பொல்லான்; யாருக்கும் தலைவணங்கி நில்லான்; தீய குணங்கள் சிறிதும் இல்லான்.

நல்லானுக்கு மனைவியானாள் முத்தம்மா எனும் மோகனப் புன்னகையாள். மதிமுகம்; தேன் குணம்: தென்றல் பேச்சு இவைதான் அவளுக்குச் சொத்து ஏனெனில் சின்ன வயசிலேயே சீமான் பலகோடி நாதர் வீட்டில், வேலைக்காரியாக விட்டுவிட்டு, சிங்கப்பூர் போய்விட்டான் அவள் அப்பன்.

♣ ♣ ♣

கலியாணத்தைச் சாக்கிட்டு, இந்தக்குடும்பத்தைக் கடன்காரர்களாக்கினார், பலகோடிநாதர். "கட்டிய மனைவியா! கையில் தாலியா", என்று சீறினார், சீமான். கடும்புலியின் வாயில் சிக்கிவிட்டோம் என்பதை அந்தக் காராம்பசுக்கள் எண்ணமவில்லை. பொல்லாதவரின் போகப் பொருள்களில் ஒன்றாகத் தங்கள் "பொன் விளையும்பூமியும் போய்விடக்கூடாதே!" எனும் கவலையால், புயலாயினர், உழைப்பில். சீக்கிரம் கடனை அடைத்துவிட முயன்றனர். முன்னேற்றவாடை ஏது நம்முடைய கிராமங்களில்? முயற்சிப்போருக்கு இல்லையா எத்தனையோ தடைகள்? எத்தன், கட்டை ரத்னம் வேறு, அடிக்கடி கொட்டிக்கொண்டேயிருந்தான் வண்டுபோல

காலப்புரு. மனிதர்களுடைய கவலைகளுக்காக. காத்திருக்குமா? நல்லானுக்கும் முத்தம்மாவுக்கும் ஒருமகன் பிறந்தான். அவனுக்கு இன்பன் என்று பெயரிட்டார், கிராமத்து அய்யர்.

♣ ♣ ♣

நம்பிக்கைதானே. இல்லாதவர்களுக்குக் கடவுள்? கடனை அடைப்போம், கழனியை மீட்போம் என்று இவர்கள் படாத பாடு பட்டுக்கொண்டிருக்கையில், பூகம்பம் புகுந்தது; ஓலை அனுப்பினார் பலகோடி உல்லாசக்கப்பல்களில் மிதக்கும் உப்பரிகைவாசிகளுக்கு ஏழைகளின் கண்ணீர்க்கடலைப்பற்றி என்ன கவலை? பணநாதன்தானே அவர்களுக்குப் பரம்பொருள். இருந்த பணத்தை எடுத்துக்கொண்டு நாகன், நல்லான், முத்தம்மா, குழந்தை அனைவரும் பட்டினம் கிளம்பினர்.

பலகோடிநாதருடைய மனைவி தாயம்மாவின் தயவால், இருப்பதைக் கொடுத்துவிட்டு, தவணை பெற்று வரலாம் என்கிற ஆசையால்இரயிலேறினர். பட்டினத்தில்வந்து இறங்கினர்.

♣ ♣ ♣

வாட்டமின்றி வாழும் 'கழுகுகள்' எத்தனையில்லை நகரத்தில்? பார்த்தன. பட்டுக்காடுகளின் கையிலேயிருந்த பண முட்டையை. பறிப்பதற்கு ஆண்டுக்கணக்கிலா திட்டம் போட வேண்டும்? ஐந்தே மணித்துளிகள்! படாதபாடுபட்டுக் கொண்டு வந்த பணத்தை இழந்தனர் ஏழைகள்.

பழக்குலை போன்றிருந்த அந்தக் குடும்பம், சிதறிற்று குழந்தையொருபக்கம், கணவன் இன்னொருபக்கம், கிழவனும் மருமகளும் மற்றொரு பக்கம்; நாதியற்றவர்களாயினர். விசாலமான வீதிகளிருந்தன பட்டினத்தில்! இவர்களது விசாரத்தைப் போக்கவோ ஒரு வழியும் தென்பட வில்லை!!. திசைக்கொருவராகப் பிரிந்தனர். திண்டாடினர். தேம்பினர். தவித்தனர் தத்தளித்தனர்.

பிறகு?

எவ்வளவோ இருக்கிறது!

எல்லாவற்றையுந்தான் பார்க்கப் போகிறீர்களே?

விருந்துக்குமுன் மேனுமா நாங்கள் விளக்கம் தரவேண்டும்!

ஓரியண்டல் மூவிஸாரின்

# "பொன்னு விளையும் பூமி"

பாடல்கள்

## 1

இயற்றியவர்: அ. மருதகாசி.

பாடியவர்: டி. எம். சௌந்திரராஜன்.

கொத்துமல்லி பூ பூக்க கொடி கொடியாய் காய்காய்க்க
கொத்துக் கொத்தாய் நெல்விளையும் சீமையிது – நம்ம
குறை தீர்க்கும் பொன் விளையும் பூமியிது
வாழை மடல் விரிய மண்ணிலே குலைசாய
வந்தாரை வாழவைக்கும் சீமையிது - நம்ம
மனசு போல பொன் விளையும் பூமியிது. (கொத்து)
வாய்க்கால் கரைபுரள வயல்களிலே மீன்புரள
வற்றாத வளம் கொழிக்கும் சீமையிது
எதை நட்டாலும் பொன் விளையும் பூமியிது. (கொத்து)
கண்ணிலே கனிவிருக்க கருத்தினிலே துணிவிருக்க
எண்ணத்தால் உயர்ந்தவங்க சீமையிது - உலகில்
எந்நாளும் பொன் விளையும் பூமியிது. (கொத்து)
அநியாயம் செய்பவரை அஞ்சாமல் எதிர்த்து நின்று
தன் மானம் காத்து வரும் சீமையிது
பெற்ற தாயாகும் பொன் விளையும் பூமியிது. (கொத்து)

## 2

இயற்றியவர்: கோபாலகிருஷ்ணன்.

பாடியவர்: ஜமுனாராணி.

ஆங்கில நாகரீகம் நல்லது
அற்புதமான கலை உள்ளது
பொங்கிடும் இன்ப இசை கொண்டது
பூமியில் ஈடு இணையற்றது – ஓ

ஒய்யாரம் கொஞ்சுது
உலகத்தை மிஞ்சுது.
உண்மையில் பார்க்க எந்தன் உள்ளம் அஞ்சுது.
(ஆங்கில,)

பாடியவர்:
சுசீலா.

சிங்காரச் சின்னப் பெண்ணே நில்லம்மா
சிந்தனை செய்து நீ சொல்லம்மா
கலைகளில் பேதம் காணலாகுமா - ஏதும்
காணாமல் குற்றம் சொல்லல் நியாயமா
ஒரு மலர் பல மணம் வீசுமா - மக்கள்
உள்ளம் எந்த நாளும் ஒன்றை ரசிக்குமா. (சிங்காரச்)

## 3

இயற்றியவர்:
திருச்சி தியாகராஜன்.

பாடியவர்:
சிதம்பரம் ஜெயராமன்.

தொகையரு:-

பொன் விளையும் பூமியிலே பொழுதெல்லாம் பாடு பட்டும்
புதுவாழ்வு காணுமே பொங்குகிறான் தொழிலாளி
அன்னை பூமி செல்வமெல்லாம்
அள்ளி அள்ளி தந்தாலும்
அரை வயிற்றுக் கஞ்சி யில்லே
ஆடையில்லே. வீடு மில்லே.

பாட்டு.

குடும்ப வண்டி குடு குடு இன்னு உருண்டு ஓடிடுது-பாதை
குறுக்கே வந்து மேடு பள்ளம் கொறைக்கப் பாக்குது
கொடுமையான வேங்கைப் புலிகள் காட்டை அழிக்குது
-விலங்கு
குணம் படைத்த மனிதமிருகம் நாட்டைஅழிக்குது
(குடும்ப)

ஆடிஆடி நம்ம ஜோடி மாடுகள் ஜோராப்போகுது
ஜோடி ஜோராப்போகுது—அதில்
ஆணும் பெண்ணும் குடும்பம் நடத்தும் அழகு தோணுது
மூடிவச்சி மோசடி செய்யும் பேடியைப் போல-ஒருத்தன்
முன்னே விட்டுப் பின்னாலே கடையாணியைக் கழட்டுறான்
(குடும்ப)

முன்னே வச்சகாலே நீயும் பின்னே வைக்காதே-உந்தன்
முன்னேற்றத்தில் தடையைப் பார்த்து முகஞ் சுளிக்காதே
கண்கள் இரண்டின் பார்வையைப் போல ஒண்ணு ஒடுங்க
-வழியில்
காணும் ஏற்றதாழ்வை காலால்மிதிச்சுப் போடுங்க.
(குடும்ப)

## 4

இயற்றியவர்
பட்டுக்கோட்டை,
கல்யாணசுந்தரம்.

பாடியவர்
டி. எம். சௌந்திரராஜன் &
சுசீலா,

கன்னியூர் சாலையிலே-பொண்ணு
களைபறிக்கப் போகையிலே
அந்த சின்ன மச்சான் சிவத்தக் கண்ணு
அவபின்னாலே எதுக்கு வந்தான்.

ஆண்: எதுக்கு வந்தான்......
சொல்லாமத்தான் புரிஞ்சிக்கலாமே ஒரு ஜாடையிலே
உள்ளம் ரெண்டும் ஒண்ணுச்சி-புது
உல்லாசந்தான் கண்டாச்சி (சொல்ல

பெண்: சும்மாகிடந்த முல்லைக்கொடி துள்ளி எதுக்கு ஆடுது

ஆண்: அதுசுத்திப்படர கொம்பைத்தேடி
துடிச்சி துடிச்சி வாடுது

பெண்: தூங்காமே சிட்டு ரெண்டும் தொடர்ந்து என்னபேசுது

ஆண்: அது ஜோடியான மகிழ்ச்சியிலே சொந்தக் கதையைப்-
பேசுது சொதந்திரமா கூடு கட்டி ஒரு மனமா வாழுது

பெண்: அந்த நிலையும், இந்த நிலையும்

இருவரும்: சொந்த நிலையைக் கௌறுது

பெண்: பொல்லாத ஆடு ஒன்று உள்ளே என்ன பாக்குது

ஆண்: புதுப் பொண்ணும் மாப்பிள்ளையும் பொருத்தமான்னு
பாக்குது

பெண்: பூங்குயிலும் யாருக்காக ஏங்கி ஏங்கி கூவுது

ஆண்: ஆண் குயிலைக் காணுமல்தான் அவசரமா கூவுது
அன்பு மீறி மயக்கத்திலே அங்கு மிங்கும் பாயுது

பெண்: அந்த நிலையும்......

ஆண்: இந்த நிலையும்......

இருவரும்: சொந்த நிலையைக் கௌறுது. (சொல்லா)

## 5

இயற்றியவர்:
அ. மருதகாசி.

பாடியவர்கள்:
ஜிக்கி - ஜானகி.

செல்லக் கிளியே செந்தாமரையே கண்ணையா - பேசும்
தெய்வச் சிலையே ஜீவச் சுடரே சின்னையா - ஓ...
தேடக் கிடைக்காத பொன்னய்யா - நீ
செல்வச் சிறப்போடு வாழய்யா...

ஆ.........
முல்லை நகை வீசி, முத்தான மொழி பேசி நீயே
துள்ளிவரும் காட்சி தோன்றுதே என் கண்ணில் சேயே
ஓ... - செல்லக்
நீல விழி கொஞ்சும் நிலவு முகம் காணும் போது
நெஞ்சில் உருவாகும் இன்ப நிலைக்கு யீடேது
உனக்கு யீடேது... - தேடக்கிடை

ஆ...............
அன்புப் பயிராக இன்ப நதியாக வந்தாய்
பொங்கும் வளம் யாவும் எங்கள் மனை தன்னில் தந்தாய்-ஓ
(தேடக்கிடை)

எது வேண்டுமாயினும் உன் பாட்டன் தருவார்
இதழூறும் முத்தங்கள் பெறுவார் - தந்தை
கதை சொல்லுவார் - அன்னை
தாலாட்டுவாள் - எங்கள்
கண்போல உனை என்றும் காப்பாற்றுவோம்.
(தேடக்கிடை)

## 6

இயற்றியவர்:
அ. மருதகாசி.

பாடியவர்கள்:
ஜமுனாராணி & குழு.

ஆ...............
உருளும் பணம் முன்னே
உலக மதன் பின்னே
தெரிந்து நட கண்ணே
திறமையுடனே.........
உல்லாசமும் சல்லாபமும்
சொல்லாமலே தன்னால் வரும்
எல்லோரும் நம்மைக் கொண்டாடவே
இல்லாத பெயர் எல்லாம் தரும்

உள்ளதைக் கோட்டை விட ஆளிருக்கும் போது
சில்லரைப் பஞ்சம் நம்ம கூட்டத்திற்கு ஏது
கண்ணாலே ஜாடை காட்டு
உன் கையைக் கொஞ்சம் நீட்டு
உன் எண்ணம் போல இன்பவாழ்வு வந்து சேரும்...
(உருளும்)

தள்ளாடும் கிழத் தாத்தாவுக்கும்
துள்ளாட்டம் போட ஆசை வரும்
ஒய்யாரிகளின் நேசம் தரும்
மெய்யான சுக வாசம் பெறும்
கள்ளரை நல்லவரைப் போல அதுகாட்டும்
கண்ணியம் உள்ளவரைக் கூட் அது வாட்டும்
என்னாளும் அதைத் தேடு
உன் சொந்த மாக்கிப் போடு
உன் எண்ணம் போல இன்ப வாழ்வு வந்து சேருமே..
(உருளும்)

## 7

இயற்றியவர்:
கவிஞர் கண்ணதாசன்

பாடியவர்:
சீர்காழி கோவிந்தராஜன்

மண்ணிற் பிறந்தான்
மண்ணுழுது பொன்படைத்தான்
தன் இடத்தை இழந்தவனைத்
தனியிடத்தே தலை சாய்ந்தான்

தன் பொருளைத் தான் திருடி
தலை பிழைக்கத் தாவுகின்றான்
வாழுகின்ற காலமெல்லாம்
மகனுக்கே வாழ்ந்திருந்தான்

வழிப்பயணம் முடிந்த பின்னும்
மகன் வாழத் துணைபுரிந்தான்
பண்பிழந்தான் வெஞ்சிறையில்
பச்சை மயில் வாடுகின்றாள்
பெண்ணெடுத்த பெருந்தலைவன்
பிறிந்து விட்ட நிலையறிந்தாள்

தீயூட்டச் செல்கின்ற பேரன் கண்டுவிட்டான்
நீயூட்டி வளர்ப்பதற்கு நானுண்டு
உனையூட்டி வளர்க்கின்ற ஒருவன் பிறிந்துவிட்டான்
பாரென்றான் தந்தை பார்த்தான் மனம்பதைத்தான்

யார் சடலம்? பெற்றவனே?
அம்மம்மா? இன்நிலையா
சீர் கொடுத்தாள் முகம்பார்க்க திரும்பினான்
-பார்வையிலும்
தலைபார்க்க முடியவில்லை-கால் பார்த்தான்
கண்புதைத்து நீர் வடித்தான் கலங்கினான்-முடிவிடத்தில்
மண்ணை வளர்த்தவனை
மண்ணுக்கே உறமானான்

## 8

இயற்றியவர்: பாடியவர்.
அ. மருதகாசி: சுசீலா:

கரும்பான என் வாழ்வு வேம்பானதே
கதையாகி கனவாகி கானலானதே
அரும்பான ஆசைகள் மலராகும் நாளில்
விரும்பாத புயல் வந்ததேனோ
திரும்பாதோ இன்பம் தீராதோ துன்பம்
திசை மாறும் படகானேன் கரைகாண்பேனோ (கரும்பா)
நிலையான செல்வமே விளையாடும் தெய்வமே
நீ எங்கே, உன் தந்தை எங்கே
மழையின்றி வாடும் பயிரானேன் இங்கே
அலைமோதும் கடலானேன் நிலை காண்பேனோ
(கரும்பா)

## 9

இயற்றியவர்: பாடியவர்:
கண்ணதாசன். ஜமுனாராணி.

ஆனந்தம் உண்மை நானந்த பெண்மை
மாயமில்லை ஜாலமில்லை மங்கை இன்பத்தேன்
காலத்தை வென்றவரும் காதலை நாடுவார்
ஞானத்தை கண்டவரும் நங்கையைத் தேடுவார்
வானத்தைப் பார்ப்பதேன், மௌனத்தில் ஆழ்ந்ததேன்.
மாயமில்லை ஜாலமில்லை மங்கை இன்பத்தேன் (ஆனந்தம்)
கானத்தைக் கேட்ட வண்ணம் நாகங்கள் ஆடுமே
கன்னியைக்கண்ட நெஞ்சம் சந்தங்கள் பாடுமே
எண்ணங்கள் யாவுமே இன்பங்கள் ஆகுமோ
மாயமில்லை ஜாலமில்லை மங்கை இன்பத்தேன் (ஆனந்தம்)

✱

AB KADIR PRESS, MADRAS-4

| | | |
|---|---|---|
| உதவி டைரக்ஷன் | ... | R திருமலை<br>R. சடகோபன், G. S. மகாலிங்கம் |
| ஸ்டுடியோ | ... | நியூடோன், நெப்டியூன் |
| ஒளிப்பதிவு | ... | G. விட்டல்ராவ் |
| உதவி | ... | S ரங்கராஜன் (நியூடோன்)<br>சந்திரசேகரன்,<br>P. N S ராமன், (நெப்டியூன்) |
| ஒலிப்பதிவு | ... | M. V. கருணாகரன்,<br>வசனம்-நியூடோன்<br>S விஸ்வநாதன்-வசனம்நெப்டியூன் |
| உதவி | ... | C K. கண்ணன்-நியூடோன்<br>B சுந்தரராஜன், M.L. சுப்பாராவ்,<br>M. S மணி-நெப்டியூன்<br>C. S பிள்ளை P. L. பழனி-ரேவதி |
| எடிட்டிங் | ... | A. பீம்சிங் |
| உதவி | ... | A பால்துரைசிங், தங்கராஜ்<br>பிரகாஷ். ரெங்கராஜ் |
| லேபரட்டரி | ... | V D S. சுந்தரம், விஜயா லேபரட்டரி |
| ஆர்ட் | ... | பாலு |
| உதவி | .. | தாஸ் |
| நடன உடை அலங்காரம் | ... | ராகினி |
| உடைகள் | ... | M. P மாதவன் |
| உதவி | ... | S. கண்ணன் |
| மேக்கப் | .. | A.V ராமச்சந்திரன், D தனகோடி |
| உதவி | ... | ஜெகதீசன், ஆறுமுகம்-நியூடோன் |
| நடன அமைப்பு | ... | சோகன்லால், ஹீராலால்<br>சின்னிலால் & சம்பத் |
| புரொடக்ஷன் நிர்வாகம் | ... | சிவம் |
| உதவி | ... | ஜான்மைக்கேல்<br>சதாசிவம், நாராயணன் |
| ஸ்டில்ஸ் | ... | குடும்பராவ்<br>போட்டோ ஆர்ட்சென்டர் |
| விளம்பர டிசைன் | ... | பக்தா |
| ஸ்டண்ட் | ... | K மாதவன் பார்ட்டி |
| பாடல்கள் ஒலிப்பதிவு | ... | R. கண்ணன் (ரேவதி) |

*Record on* **R C A** *Sound System.*


ஓரியண்டல்
மூவீஸ்
பொன்னு விளையும் பூமி
டைரக்‌ஷன் · A. பீம்சிங்
பூரண
உரிமையாளர் · S.K. பிக்சர்ஸ்,
திருநெல்வேலி,
சென்னை - 24.
BAKTHA